06.04.2026 STC 14/2023 DW1. ஜெராபி (எ) மேரி ஜெராபி

கடந்த 10.02.2026–ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி இன்று குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.04.2026.**

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கில் புகார்தாரரின் மகளும் எனது அக்காவின் மகனும் திருமணம் செய்துக் கொண்டார்கள் என்றால், சரிதான். காதல் திருமணம் 6 வருடத்திற்கு முன்பு செய்துக் கொண்டார்கள். புகார்தாரர் IREL நிறுவனத்தில் பணிபுரிந்தார் என்றால், சரிதான். புகார்தாரர் 30.05.2022ம் தேதி பணி ஓய்வு பெற்று விட்டார் என்றால், தேதி சரியாக தெரியாது. ஆனால் அவர் பணி ஓய்வு பெற்று விட்டார்.

2. நான் சீட்டு நடத்தி வருகிறேன் என்றால், இல்லை. ே ஹமா ஆண்டோ என்பவரை எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். புகார்தாரரின் வீட்டிற்கு ேஹமா ஆண்டோவை நான் அழைத்துச் சென்றேன் என்றால், இல்லை. கடன் கேட்பதற்காக நான் தான் அறிமுகம் செய்து வைத்தேன்.

3. நான் எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால், இந்தியன் வங்கி, குளச்சல் கிளையில் கணக்கு வைத்துள்ளேன். நான் எத்தனை வருடங்களாக கணக்கு வைத்துள்ளேன் என்றால், அது சரியாக ஞாபகம் இல்லை. வங்கிக் கணக்கு துவங்கும் பொழுது மாதிரி கையொப்பம் வாங்கப்படும் என்றாலும், அந்த மாதிரி கையொப்பம் எனக்கு நினைவுள்ளதா என்றால், நினைவில்லை.

4. எனது வங்கிக் கணக்கின் காசோலையை வைத்து நான் எத்தனை முறை பணபரிவர்த்தனை செய்துள்ளேன் என்றால், நான் செய்ததில்லை. நான் நீதிமன்றத்தில் பிடிகட்டளை ரத்து செய்யும் பொழுது யூஜின் ஜெராபி என ஆதார் நகலை கொடுத்துள்ளேன் என்றால், சரிதான்.

5. யூஜின் ஜெராபி என்ற எனது பெயரை நான் சட்டப்படியாக தான் மேரி ஜெராபி என்று மாற்றினேன் என்றால், நான் இ–சேவை மையத்தில் எனது பெயரை கூறி மாற்றிக் கொண்டேன். இவ்வழக்கின் வழக்கறிவிப்பை நான் பெற்றுக் கொண்டேனா என்றால், பெற்றுக் கொண்டேன்.

6. நான் முதல்விசாரணை சாட்சியத்தில் குளச்சல் காவல்நிலையத்திலிருந்து காவலர்கள் எனது வீட்டிற்கு வந்த பொழுது தான் இவ்வழக்கை பற்றி தெரியும் என்று

கூறினேன் என்றால், சரிதான். வழக்கறிவிப்பில் உள்ளது அனைத்தும் உண்மை என்பதால் தான் நான் பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால், சரியல்ல.

7. நான் புகார்தாரர் மீது கொடுத்த புகாருக்கு மனு இரசீது உள்ளதா என்றால், உள்ளது. அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலுமா என்றால், அடுத்த வாய்தாவில் நான் அதனை சமர்ப்பிக்கிறேன். நான் புகார்தாரரின் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

8. புகார்தாரர் எனக்கும் ேஹமா ஆண்டோவிற்கும் தவிர வேறு யாருக்கேனும் கடன் கொடுத்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது. புகார்தாரர் அதிக வட்டி வாங்கியுள்ளார் என்பதற்காக அவர் மீது ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை.

9. புகார்தாரரிடம் நான் 5 லட்சம் வாங்கிக் கொண்டு காசோலையில் நான் வேண்டுமென்று நான் கையொப்பத்தை மாற்றி போட்டுக் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் அவரிடம் இருந்து எந்த பணமும் வாங்கவில்லை.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.